# விடியல்
## The Dawn

இதழ்-13, மே-2015
தனிச்சுற்றுக்கு மட்டும்



கௌரவ ஆசிரியர்
முனைவர். வே. இராதாகிருஷ்ணன்
கல்லூரி முதல்வர்

ஒருங்கிணைப்பு
முனைவர்.பெ.கணேசமுருகன்
துறைத்தலைவர்

ஆசிரியர் குழு
தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

தட்டச்சு & இதழ் வடிவமைப்பு
முனைவர் சி.ஆர்.சுரேஷ் திரு. மு. சதீஸ்குமார்
முனைவர் த.சுந்தரராஜ் திரு.செ.தங்கராஜ்



வெளியீடு:
**தமிழ்த்துறை**

KSR COLLEGE OF ARTS AND SCIENCE
INDIA
Knowledge is Power

கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)
திருச்செங்கோடு–637215.
தமிழ்நாடு, இந்தியா.
**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in
**E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu



© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher.*


## தலையங்கம்

*தமிழ் மாதங்களில் வைகாசி மாதம் என்றாலே நல்ல காரியங்கள் செய்ய ஏற்ற மாதம் என்று கருதப்படுகிறது. சித்திரை மற்றும் கத்திரிக்காக தள்ளிப்போடப்பட்ட நல்ல நிகழ்ச்சிகளை வைகாசி மாதத்தில் செய்பவர்களும் உண்டு. வைகாசி மாதத்தை மாதவ மாதம் என்றும், வைசாகம் என்றும் அழைப்பார்கள்.*

*இந்த மாதத்தில் வரும் விசாக நட்சத்திரம், ஞானச் சிறப்பு பெற்றது. சரவணப் பொய்கையில் முருகப் பெருமான் அவதரித்தது இந்தப் புனித நாளில்தான். இந்தத் திருநாளில் முருகப் பெருமானின் திருத்தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும்.*

*ராமலிங்க வள்ளலார், வடலூரில் சத்தியஞான சபை என்னும் அமைப்பைத் துவக்கி வைத்து, தர்ம சாலையில் ஏற்றி வைத்த ஜோதி இன்னமும் ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டுதான் இருக்கிறது. இந்த நிகழ்ச்சியின் ஆரம்பம் ஒரு வைகாசி மாதத்தில்தான். புத்தர் அவதரித்ததும் வைகாசி மாத பௌர்ணமியன்றுதான்.*

*வைகாசி மாதத்தினை வைணவர்கள் "மாதவ மாதம்" என்று போற்றுவார்கள். வைகாசி என்ற பெயரில் "காசி" என்ற சொல் வருவதால் இம்மாதத்தில் காசியில் கால் வைப்பது சிறப்பிக்கப்படுகிறது. முருகப் பெருமான் சரவணப் பொய்கையில் வைகாசி விசாகத்தில் உதித்ததால், அன்று முருகன் கோவில்கள் விழாக்கோலம் காணும்.*

*வைகாசி என்பதை "விகாஸம்" என்றும் சொல்வர். விகாஸம் என்றால் மலர்ச்சி என்று பொருள்.வைகாசிதான் சமஸ்கிருதத்தில் வைகாஸம் ஆனது.*

# உள்ளடக்கம்


**கவிதை**....................03-09

- அக்கா
- தோல்வி
- பிரிவு
- நட
- நண்பன்
- வளையல்கள்
- வெற்றி நிச்சயம்
- நட்பு
- அம்மா
- நீங்கா நினைப்பு
- புதுமை
- நட்பு
- நம்பிக்கை
- வாழ்க்கை
- உன்னால் முடியும்
- பிரிவின் மறுபக்கம்
- தோழி
- சுசீந்திரம்
- பூ யாருக்காக
- சிற்பம்
- தாயின் அன்பு
- சோதிக்கவே
- பகல் காற்று
- நட்பு
- வெற்றியின் ரகசியம்
- பிரிவு
- நிம்மதி
- காதல்
- கவிதை
- உழைப்பு
- நம்பிக்கை

**சிறுகதை**....................10-15

- வறுமையில் வாழும் குடும்பம்
- ஏக்கம்

**கட்டுரை**....................16-19

- நமது பாரம்பரியம்
- நகங்கள்
- பூமி

**பொது அறிவு**.........19-29

- இந்த மாதத்தின் முக்கிய தினங்கள்
- முதல் பெண் பிரதமர்கள்
- சின்னச்சின்ன கேள்விகள்
- சிந்தனைத் துளிகள்
- பொன்மொழிகள்
- விடுகதை
- சாதிக்க நான்கு விஷயங்கள்
- பொது அறிவு
- அம்மா

**ஓவியம்**..................29-32

# கவிதைகள்

## அக்கா

அக்கா இருக்கும் அனைவரும்
மிகவும் பாக்கியம் பெற்றவர்கள்;
ஏனென்றால்
அந்த வீட்டில் மட்டும் அவர்களுக்கு
இரண்டு தாய் இருக்கிறார்கள் இந்த
பாக்கியம் உலகில் பிறக்கும்
அனைவருக்கும்
கிடைப்பதில்லை!
பாக்கியம் பெற்றவர்களுக்கு மட்டுமே
உரியது! – அது அவர்கள்
பெற்ற பெறும் பாக்கியம்!!

**ம.நிவேதா**
இயற்பியல் துறை இரண்டாமாண்டு

## தோல்வி

வெற்றியை விட தோல்விக்கு
பலம் அதிகம்
வெற்றி சிரித்து
மகிழ வைக்கும்
தோல்வி சிந்தித்து
வாழ வைக்கும்!

**ஈ.ரம்யா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## பிரிவு

நட்பில் பிரிவு துரோகம்!
குடும்பத்தில் பிரிவு நம்பிக்கை!
சகோதரியின் பிரிவு துக்கம்!
காதலில் பிரிவு வேதனை!
கணவன் மனைவி பிரிவு சந்தேகம்!
சகோதரின் பிரிவு வெறுப்பு!
ஆசிரியரின் பிரிவு வளர்ச்சி!
உறவுகளின் பிரிவு நிம்மதி!
தந்தையின் பிரிவு பெரும் இழப்பு!
தாயின் பிரிவு வாழ்க்கையில்
முற்றுப்புள்ளி!!

**மகிளா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## நட

நீ வெளிச்சத்தில் நடந்தால்
உலகமே உன்னை
பின் தொடரும் ...
ஆனால்,
நீ இருட்டில் நடந்தால்
உன் நிழல் கூட
உன்னைப் பின் தொடராது..

**எம்.ஜனனி**
முதலாண்டு உயிர்வேதியியல் துறை

## நண்பன்

என்னை 10 மாதம் சுமந்து
பெற்ற என் தாய்
கூட கலந்து கொள்ள முடியாத!
என் இறுதி ஊர்வளத்தில்
என் நண்பன் கலந்து
கொள்வான்
என்னை புதைக்க அல்ல
என்னை சுமக்க..!

**க.ஜீவஜோதி**
ஆங்கிலத்துறை இரண்டாமாண்டு

## வளையல்கள்

மறுமணம் என்ற பெயரில்
வாழ்க்கைக்கு மட்டுமல்லாமல்
வளையல்களுக்கும் ஆசைப்படும்
விதவைப் பெண்களின் மத்தியில்
என்னவளும் எழுதினால் ஒருகவிதை
உண்மை விதவைகளின் வலியை
வளையல்கள் எனும் தலைப்பில்

**மு.பொற்கொடி,**
இரண்டாமாண்டு உயிரிதொழில்நுட்பவியல்-ஆ.

## வெற்றி நிச்சயம்

தோல்வி என்பது உழி போன்றது
வெற்றி என்பது சிற்பம் போன்றது
முதலில் உழியைப் பிடித்துப் பழகு
அப்பொழுதுதான் சிற்பத்தை
செதுக்க முடியும்!!

**ச.ம.கோகுலவாணி**
வணிகவியல் முதலாமாண்டு

## நட்பு

நிலத்தினும் பெரிது
வானினும் உயர்ந்தது
நீரினும் ஆழமானது
நம் நட்பு
ஆம்...
நீயும் நானும்
வாட்ஸ்அப்பில்
இணைந்திருக்கையில்.

**த.சுந்தரராஜ்,**
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை

## அம்மா

உன் முகம்
பார்க்கும் முன்
உன் குரல்
கேட்கும் முன்
உன் குணம்
அறியும் முன்
நீ கருவில்
இருக்கும் போதே
உன்னை காதலித்த
முதல் உயிர்
அம்மா!!

**ரா.பிரதாப்**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## நீங்கா நினைப்பு

விக்கல் எடுத்தும் தண்ணீர்
குடிக்கவில்லை – ஏனென்றால்
நினைப்பது நீயாக இருந்தால்
எடுக்கட்டும் விக்கல்
சில நொடிகள்!!

## புதுமை

நேசித்தப் பொருள்
கிடைப்பதை விட...
கிடைத்தப் பொருளை
நேசி!! – அதாவது
நீ நேசித்தப் பொருள்
உனக்கு புதுமை – ஆனால்
கிடைக்காத பொருளுக்கு
நீ தான் புதுமை!!"

**ரா.கீர்த்தனா**
பி.பி.ஏ முதலாமாண்டு 'ஆ' பிரிவு

## நட்பு

பூவின் மணமும் நட்பின் குணமும்
ஒன்றுதான்
பூ உதிர்ந்தாலும் வாசம்
போவதில்லை
நம் நட்பு பிரிந்தாலும் நேசம்
போவதில்லை!!

**மு.சாந்தி**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## நம்பிக்கை

நம்பிக்கையுடன் நகர்ந்து கொண்டே
இரு நதியாக!!
ஒரு நாள் உனக்கு
வெற்றி வந்து குவியும்
கடலாக!!

**எம்.பிரேமா**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## வாழ்க்கை

விடியும் வரை தெரியவில்லை
கண்டது கனவு என்று
வாழ்க்கையும் அப்படிதான்...
முடியும் வரை தெரியவில்லை
வாழ்வது எப்படி என்று..

**ஈ.ரம்யா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## உன்னால் முடியும்

உன்னால் முடியும் என்று
நினைத்துப்பார் முடியும்!
முடியாது என்று நினைத்துப்பார்
முடியும்!
படிக்க முடியும் என்று
நினைத்துப்பார் முடியும்!
படிக்க முடியாது என்று
நினைத்துப்பார் முடியும்!
சாதிக்க முடியும் என்று

நினைத்துப்பார் முடியும்!
நம்மால் முடியாது என்றால்
எதுவும் இல்லை
முடியும் என்றால் எல்லாம் முடியும்!
பிறப்பது எதுக்கு சாதிக்கதான்
இல்லையென்றால்
எதுக்கு பிறக்கிறோம்!!

**கே.மோகனபிரியா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## பிரிவின் மறுபக்கம்

ஆயிரம் ஆண்டுகளாகப்
பிரிந்திருந்த சோகம் போல
இன்று ஒரு நொடியில் - நீ
பேசியதால் போனது என் சோகம்
என்னிடம் பேசியது
சர்வ சாதாரணமாக இருக்கலாம் -
அது தான் எனக்கு
தெய்வத்தையே
நேரில் கண்டது போல
அந்தத் தெய்வமும்
என் அம்மாவைப் போல
உன்னையும்
தெய்வமாக்கி நேசிக்கிறேன்!
உன்னுடைய நேசிப்புதான் எனக்கு
சுவாசிப்பு...!

**கை.நதியா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## தோழி

உன் கண்ணீர்த்
துடைக்க மட்டும்
என் விரல்கள்
கடிக்கிறது.
சிறுகல் தடுக்கி
தடுமாற
என் கைகள்
நீள்கிறது.
உன் வெற்றியில்
என் கண்ணீர்
உனக்கு மாலையாகிறது.
என்னை அறியாமலே
உன் மீது.
எனக்குண்டான
பாசம்... அக்கறை
என்னவென்று கூறுவது
கூறும் போது
மகிழ்ச்சியை கொடுத்தவள்
என் தோழி!!

**எஸ்.கோகிலா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## சுசீந்திரம்

ஆற்றங் கரையுண்டு;
அழகான சோலையுண்டு;
நந்த வனமுண்டு;
நய்செயல்கள் சூழவுண்டு;
சாத்திரங்கள் உண்டு;

தமிழ்க்கல்விச் சாலையுண்டு;
தெப்பக் குளமுண்டு;
தேரோடும் வீதியுண்டு;
மாளிகைகள் உண்டு;
மடங்கள் பல உண்டு;
நான்கு மதில்கள் உண்டு;
நடுவிலொரு கோவிலுண்டு;
கோபுர வாசலுண்டு;
கொடிமரம் இரண்டுண்டு;
சித்திரையும் மார்கழியும்
திருவிழாக் காட்சி உண்டு;
தொன்னகரம் ஆன
சுசிந்தைச் சிறப்பெல்லாம்
என்னொடு நாவால்
எடுத்துரைக்க ஏலாதே!!

**பி.ரேணுகா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## பூ யாருக்காக

சலவைப் பூக்களே
நீங்கள்
கனவின் புன்னகைகள்;
காதலின் ஊறல்கள்;
நறுமண நட்சத்திரங்கள்;
நிலவின் உச்சரிப்புகள்;
காற்றில் கடிதம் எழுதும்
காதலிகள்
நீங்கள் ஒரு சாதி
வண்டுகள் ஒரு சாதி – எனவே
உங்கள் திருமணம்
கலப்புத் திருமணம்

**ர.கவிபிரியா**
கணிதவியல் இரண்டாமாண்டு

## சிற்பம்

வாழ்க்கை என்பது ஓவியம் அல்ல
மாற்றி மாற்றி வரைய – அது
ஒரு சிற்பம் - செதுக்கினால்
செதுக்கியதுதான்!
வாழ்க்கையை அமைக்கும் போது
கவனமாக செயல்பட வேண்டும்!!

**ஈ.ரம்யா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## தாயின் அன்பு

பூமி கூட புண்ணியம் செய்தது
என் மகளின் பாதம் பட!
மலைகளும் மயங்கி விழுந்தன
அவளின் சிரிப்பை கேட்டு!
மயில்கூட வியந்து பார்த்தது
அவள் நடையை நடனம் என்று!
பூக்களும் புன்னகைத்தது
அவள் மூச்சிக்காற்றுப் பட்டதால்
வானம் கூட வாயசைத்தது
அவளின் மழலைப் பேச்சால்!
என் வாழ்வும் நிறைவடைந்தது
அவள் கொடுத்த தந்தை என்னும்
உறவால்!!!

**இரா.சந்தியா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## சோதிக்கவே!

எத்தனை முகங்கள்
என்னில் பட்டன
அத்தனை முகங்களும்
நெஞ்சை சுட்டன
பட்டதும் சுட்டதும்
என்னைச் சோதிக்கவே!!

**கை.நதியா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## பகல் காற்று

கூவும் குயிலையும்
கரையும் காகத்தையும்
திசை தெரியாமல்
அலைய வைக்கும்
காற்றே!
உனக்கு வேறு நேரம்
கிடைக்கவில்லையா....!

**சு.சதீஸ்**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## நட்பு

நான் உன்னைப் பற்றிக் கனவில்
கண்ட போது கூட
நினைக்கவில்லை – நீ என்னை
கஷ்டப்படுத்துவாய் என்று
இப்போது உணருகிறேன்
கனவை ஒரு நிமிடம்
நினைத்துப்பார்த்திருக்கலாம் என்று!!

**எஸ்.பவித்ரா சுப்ரமணி**
கணிதவியல் முதலாமாண்டு 'ஆ' பிரிவு

## வெற்றியின் ரகசியம்

அன்பு காட்டு
அமைதியாகி விடாதே!
இரக்கம் காட்டு
ஏமாந்து விடாதே!
பணிவாய் இரு
கோழையாக இராதே!
கண்டிப்பாய் இரு
கோபப்படாதே!
சிக்கனமாய் இரு
கஞ்சனாய் இராதே!
வீரனாய் இரு
துஷ்டனாய் இராதே!
சுறுசுறுப்பாய் இரு
பதட்டப்படாதே!
தர்மம் செய்
ஆண்டியாகி விடாதே!
உழைப்பை நம்பு
கடவுளை
மறந்துவிடாதே!

**பெ.ஜான்சிராணி**
கணிதவியல் முதலாமாண்டு

## பிரிவு

செடி வாடினால்
தண்ணீர் விடுவேன்
மனம் வாடினால்
கண்ணீர் விடுவேன்
நீ வாடினால்
உயிரை விடுவேன்!!

**ச.செ.கீதாஞ்சலி**
கணிதவியல் முதலாமாண்டு ஆ' பிரிவு

## நிம்மதி

சுடுகாட்டில் உயிர் உள்ள
பெண்களுக்கு அனுமதியில்லை
ஏன் தெரியுமா அங்கையாவது
அவர்கள் நிம்மதியாக
உறங்கட்டும் என்று!!!

**ரா.கீர்த்தனா**
பி.பி.ஏ முதலாமாண்டு 'ஆ' பிரிவு

## காதல்

மழையில் நனையும் - உன்
அழகைப் பார்த்து
மேகம் கூட கண்ணடிக்கிறது
மின்னலாய்!

**வனிதா**
ஆடைவடிவமைப்புத்துறை முதலாமாண்டு

## கவிதை

கவிதை என்பது
நமது கற்பனைத் திறமையை
வளர்க்கும்
அடுத்த கல்வி!

**ப.கோமதி**
ஆடைவடிவமைப்புத்துறை முதலாமாண்டு

## உழைப்பு

சோம்பேரிக்கு சோகத்தையும்
புத்திசாலிக்குபுத்துணர்வையும் தரும்
உழைப்பவன் கைகளில்
உலகம் தெரியும்
உறங்குபவன் கண்களில்
உவமைதான் தெரியும்
வியர்வைக்கு வெற்றி உறுதி
தூக்கத்திற்கு துக்கம் உறுதி,
துடித்தெழட்டும் உன் செங்குருதி.

பி.பிரியதர்ஷினி,
இளங்கலை தமிழிலக்கியம் முதலாமாண்டு

## நம்பிக்கை

நம்பிக்கை இல்லாத காதலும்
உரிமை இல்லாத நட்பும்
என்றும் நிலைத்திருப்பதில்லை...!

**ரா.யுவராஜ்**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

# சிறுகதை

## வறுமையில் வாழும் குடும்பம்

ஒரு ஊருல பல குடும்பங்கள் வசித்து வந்தனர். இருந்தாலும் அந்த பல குடும்பங்களில் ஒரு குடும்பம் மட்டும் மிகவும் வறுமையில் வசித்து வந்தனர். அந்த குடும்பத்தில் மூன்று குழந்தைகளும் ஒரு பாட்டி, தாத்தா, அம்மா, அப்பா ஆகிய ஏழு பேர் சேர்ந்து ஒரு பெரிய குடும்பம்.

அப்பாவும்,அம்மாவும் வேலைக்கு சென்றால்தான்தினமும் அவர்களுக்கு உணவு. இல்லாவிட்டால் அவர்கள் பட்டினியாக தான் இருக்க வேண்டும். இரண்டு பேரும் தினமும் வேலைக்கு செல்வார்கள். மூன்று குழந்தைகளும் அரசுப் பள்ளியில் படித்து வந்தனர்.

ஒரு நாள் பாட்டிக்கு உடல் நிலை சரியில்லாமல் போய்விட்டது. அப்போது வீட்டில் யாருமே இல்லை. பாட்டிக்கு மிகவும் காய்ச்சல் அதிகமானது. வேலைக்குபோய்ட்டு திரும்பி வந்த அவருடைய மகனும் மருமகளும் அம்மா இப்படி படுத்துக் கிடப்பதைப் பார்த்துக் கத்தினர். அவருடைய மகன் அம்மா என்று கத்திக் கொண்டே அவரைத் தூக்கிக் கொண்டு அரசு மருத்துவமனையில் சேத்தினார்.

சிறிது நேரம் கழித்து போய் உங்க அம்மாவைப் பாக்கலாம் என்றார் டாக்டர். அவரும் சிறிது நேரம் கழித்து தன் அம்மாவை பார்க்க உள்ளே சென்றார். அம்மா என்று மெதுவாக கூப்பிட்டார். அவரும் கண்களை விழித்தார் அவள் எனக்கு ஒன்றுமில்லை நீ அழுவாதப்பா என்றாள். பின்பு தான் அவனுக்கு நம்பிக்கை வந்தது. சிறிது நேரம் அம்மாவிடம் பேசிவிட்டு வீட்டிற்க்குப் புறப்பட்டார்.

வீட்டிற்க்குச் சென்றதும் அவருடைய இரண்டாவது குழந்தை மகா பள்ளியில் நடந்த கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு வாங்கி வந்திருந்தது. அவர் வீட்டிற்கு போனதும் அந்த குழந்தை அப்பா என்று கத்திக் கொண்டே அது வாங்கிய பரிசை அப்பாவிடம் காட்டியது. அவருக்கு என்ன சொல்வது என்றே தெரியாமல் கண்களில் ஆனந்த கண்ணீர் வந்தது.

இருந்தாலும் அவருடைய மனதில் எல்லாக் குழந்தைகளைப் போலவும் நம் குழந்தையும் தனியார் படிக்க வைக்க வேண்டும் என்ற ஆசை அவருக்கும் உண்டு. ஆனால் குடும்ப

சூழ்நிலைகாரணமாக மூன்று குழந்தைகளையும் அரசுப் பள்ளியில் படிக்க வைக்க வேண்டியுள்ளதே என்று நினைத்து மனம் வருந்தினார். இருந்தாலும் அவருக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.ஏனென்றால் அரசுப் பள்ளியில் படித்தாலும் நம்முடைய குழந்தைகள் நன்றாகப் படித்து பரிசுகள் எல்லாம் வாங்குகின்றதே என்று மிகவும் சந்தோஷப்பட்டார்.

அவருடைய மனைவியும் குடும்ப சூழ்நிலைக்கேற்ப நடந்து கொள்வார். வீட்டில் எவ்வளவு கஷ்டம் இருந்தாலும் குழந்தைகளிடம் அன்பாக நடந்துக் கொள்வார். அவருடைய அத்தை, மாமாவை தன் பெற்றோர்போல் பாத்துக் கொள்வார். அதனால் அவளை எல்லாருக்கும் பிடிக்கும். இவர்கள் வறுமை போக வழி உண்டோ..? இவர்கள் வறுமையில் வாழ்ந்தாலும் பிறருக்கும் அவர்களால் முடிந்த உதவியை செய்வார்கள். வறுமையில் இருந்தாலும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார். தன் வறுமையை வெளிக்காட்டாமல் வாழ்ந்தார்.

**வி.சத்யா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## ஏக்கம்

அதிகாலை நேரம். சாவல் சத்தத்துடன் குருவிகளின் சத்தமும் இணைந்து காதைப் பிளந்து கொண்டிருந்தது. அப்போது,'எந்திரிச்சு நெல்லங்காட்டுக்குப் போயி தண்ணி விடுங்க...!' என்று ராணியின் குரல் சற்று தூக்கலாக கந்தனின் காதில் விழுந்தது.

பக்கத்துப் படுக்கையில் படுத்திருந்த மூர்த்தி ஏம்மா இப்படிக் காலங்காத்தால உயிர வாங்குற...? கொஞ்சம் கத்தாம பேசு என அரைத் தூக்கத்தில் ஏதோ முணுமுணுத்தான்.

கதையை ஆரம்பித்த வேகத்தில் இவர்களது குடும்பத்தைப் பற்றிச் சொல்லவேயில்லை. மன்னிக்கவும். இலங்கையில் உள்ள கிளிநொச்சி எனும் ஊரில் தான் இவர்களது குடும்பம் வசித்து வருகிறது. கந்தன் - ராணிக்கு திருமணம் ஆகி 47 வருடங்கள் உருண்டோடி விட்டது. ஒரு பையன் மூன்று பெண் பிள்ளைகள். அதில் மூத்தவளான கண்ணம்மாளுக்குத் திருமணமாகிச் சென்றுவிட்டாள். அடுத்ததாக இருப்பவன் மூர்த்தி. இவன் மருத்துவப் படிப்பினை முடித்துவிட்டு

சின்னதாக ஒரு கிளினிக் வைத்திருக்கிறான். இரண்டு தங்கைகளில் மூத்தவளான அனிதா பன்னிரண்டாம் வகுப்பு படித்து வருகிறாள். கடைக்குட்டி கவிதா பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கிறாள். இவர்களது குடும்பம் விவசாயத்தை தொழிலாகச் செய்பவர்கள்.

கந்தன் எழுந்து ஏதோ ராணியிடம் பேசிவிட்டு விறுவிறுவென காட்டிற்குப் புறப்பட்டுச் சென்றான். அடுத்த பூஜை மூர்த்திக்கு, 'டேய் இப்படி தூங்கனினா உன் கிளீனிக்குக்குச் சீக்கிரம் மூடுவிழா நடத்திவிடலாம்' என ஆரம்பித்தாள் ராணி.

அம்மா...! போதும் போதும் நான் எழுந்து விட்டேன் என இடையீடு செய்தது மூர்த்தியின் குரல்.

இவர்கள் எழுந்திரப்பதற்கு முன்னதாகவே அனிதாவும் கவிதாவும் எழுந்து அம்மாவிற்கு ஒத்தாசையாக வீட்டு வேலையைச் செய்து கொண்டிருந்தார்கள்.

அந்தஸ்தில் குறைந்தவர்கள் எனினும் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்த இவர்களது வாழ்க்கையில் திடீரெனத் திருப்பம் ஏற்பட்டது. அதுதான் உள்நாட்டுப் போர். இலங்கை இராணுவத்திற்கும் தமிழ் அமைப்புக்கும் இடையே புகைந்து கொண்டிருந்த சண்டை போராக வெடித்தது.

ஒருநாள் இரவுப் பொழுது நல்ல நடுநிசி வேளையில் ஆழ்ந்த உறக்கத்தில் கந்தனின் குடும்பம். அப்போது இராணுவத்தினர் சிறிய ரக விமானங்களில் உர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்........என வந்தனர். இவர்கள் வசிக்கும் சுற்றுவட்டாரப் பகுதியில் குண்டுகளை ட்ட்ட்டமார் ட்ட்ட்டுமிர் என வீசிச் சென்றனர். நள்ளிரவில் இருந்து அப்பகுதி முழுவதும் ஒரே அழுகைக் குரல். குண்டுகள் பட்டதில் அப்பகுதில் ஏராளமானோர் இறந்தனர். இன்னும் சிலரின் கை, கால் போன்ற உடலுறுப்புகள் பிய்ந்தும் பாதி உயிர் போன நிலையிலும் வலியின் வேதனையில் துடிதுடித்துக் கொண்டிருந்தனர்.

இந்தத் தாக்குதலில் இவர்களது குடும்பத்திற்கு பாதிப்பு இல்லை. பொழுது விடிந்ததும் கந்தன் முதல் வேலையாக தன்னுடைய வயலைக் காணச் சென்றவனுக்கு அங்கு காத்திருந்தது அதிர்ச்சி மட்டுமே. ஆம்... இரவில் இராணுவத்தினர் வீசியெறிந்த குண்டுகளால் நெற்பயிர் முற்றி அறுவடைக்குத் தயாராக

இருந்தவையெல்லாம் அழிந்து விட்டது. அதனைக் கண்ட கந்தன் ‘ஐயோ எல்லாம் போச்சே’ எனக் கூறிக் கொண்டே மயங்கி விழுந்து உயிரை விட்டான். பக்கத்து வீட்டுக்கார ராமையன் கந்தன் வீட்டை நோக்கி ஓடி வருகிறான். ராணி, ‘ராமையா ஏன் இப்படி ஓடி வருகிறாய்’ எனக் கேட்கிறாள்.

நான் என்னத்தச் சொல்லுவேன்... ‘எல்லாமே குடி முழுகிப் போச்சு’

ராணி, ‘என்னனு சொல்லுங்கண்ணா’

ராமையா, ‘நம்ம அண்ணன் காட்டுல பிணமாக் கிடக்கறாறு. பயிர் எல்லாம் எதுக்கும்மே உதவாது’ன்னு சொன்னான்.

ராமையா கொண்டு வந்த செய்தி ராணிக்கும் பிள்ளைகளுக்கும் பேரிடியாக இருந்தது. ராணி இடிந்துபோய் வீட்டில் உட்காந்து அழுது கொண்டிருந்தாள். மூர்த்தி மனதில் ரனத்தைச் சுமந்து கொண்டு தன் தந்தையை அடக்கம் செய்து வந்தான். அதன் பிறகு, வீட்டிற்கு வந்து தன்னுடைய தாய்க்கு ஆறுதல் சொல்லிவிட்டு தன்னுடைய கிளினிக் சென்று ஊரில் அடிபட்ட மக்களுக்கு மருத்துவ உதவிகளைச் செய்து வந்தான்.

மாலை நேரம்....மீண்டும் வானைப் பிலக்கும் அளவிற்கு பேரோசை...மக்கள் தங்கள் தலையை மேலே தூக்கி வானைப் பார்த்தனர். அடுத்தநொடி வானிலிருந்து சலசலவென குண்டு மழையைப் பொழிந்தது இலங்கை இராணுவம். இந்தத் தாக்குதலில் மூர்த்தியின் மருத்துவக் கிளீனிக் இராணுவக் குண்டுகளில் இருந்து தப்பிக்க முடியவில்லை. வேகமாக வந்த குண்டு ஒன்று கிளீனிகின் மேல் விழுந்தது. அதினுள் இருந்த மூர்த்தியும் ஒருசில கைதிகளும் அக்குண்டு பட்டு இறந்தனர்.

ஏற்கனவே தன்னுடைய கணவன் இறந்ததில் இருந்து மீளாத ராணிக்கு மீண்டும் மகனின் இரப்பினைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அண்ணன் இறந்த செய்தியைக் கேட்டதும் தங்கைகள் அனிதாவும் கவிதாவும் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தார்கள். அப்போது தான் ராணி முடிவு செய்தாள், இனி இந்த ஊரில் இருந்தால் இருக்கிற இரண்டு ஜீவன்களையும் இந்த குண்டுகளுக்கு இரையாக்கி விடுவோம் ஆகவே இவ்வூரினை விட்டு கிளம்பிச் செல்ல வேண்டுமென்று.

அன்றிரவே அவ்வூரினைச் சேர்ந்த ஒருசிலருடன் சேர்ந்து கடல் வழியாகக் கப்பலில் ஏறி இலங்கைத்

தீவினை விட்டு மூவரும் புறப்பட்டுச் சென்றனர். கப்பல் கடலில் சென்றது. கடல் காற்று மெதுவாக வீச ராணிக்கு கணவனின் நினைவுகள் வந்து துன்புறுத்தியது.

பொழுது புலர்ந்தது, இவர்கள் பயணித்த கப்பல் இந்தியப் பகுதியினை நோக்கி வந்து கொண்டிருந்தது. அப்போது இந்திய கடற்படைக்குச் சொந்தமான கப்பல் இவர்களது கப்பலை வழிமறைத்து கப்லுடன் சேர்த்து சிறைபிடித்தார்கள். அதிலிருந்தவர்களைக் கரைக்கு அழைத்து வந்து விசாரனை நடத்தினர். அதில் அவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும், போரின் காரணமாக உயிர் பிழைக்க இங்கு வந்ததாகவும் தெரிவிக்க உடனே அவர்கள் அகதிகள் முகமாற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தனியாகவே வசித்துப் பழகிய இவர்களுக்கு அனைவருடனும் சேர்ந்து வாழுவதற்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும் இருந்துதானே ஆக வேண்டும். கொஞ்ச நாட்கள் முள்ளில் சிக்கிய சேலையாக நகர்ந்தது இவர்களது வாழ்வு.

ஒருநாள் இரவு சுமார் 8 மணி இருக்கும். அனிதா அலறியடித்துக் கொண்டு ஓடி வந்தாள். ஏம்மா...? என்ன ஆச்சு...? என்று கேட்டபடி ராணி...

ஓடி வந்த அனிதா அம்மாவினை அனைத்துக் கொண்டாள். அனிதாவின் கண்ணீர் ராணியின் தோளில் பட்டது. உடனே சாய்ந்திருந்த அனிதாவை முன்புறம் தள்ளி ஏண்டி அழுற...? என்றாள் ராணி.

அம்மா...அது வந்து...!

என்ன சொல்லுடி....

நான் சிறுநீர் கழிக்கச் சென்றேன். அப்போது இரவுநேர காவலாளியான காதிரும் சுவாமிநாதனும் என்னிடம் தவறாக நடந்து கொள்ள முயன்றார்கள் என்று அழுதபடியே சொன்னாள்.

அப்போது ராணி சமாதானப் படுத்தி வீட்டினுள் அழைத்துச் சென்றாள்.

அடுத்தநாள் முகாமில் அனைவரிடமும் சொல்லி புகார்க் கடிதமொன்றை எழுதி அதில் கையொப்பமிட்டு உயர் அதிகாரியிடம் கொடுத்தார்கள். அவரும் இவர்களிடம் நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்கள்.

ஒருசில நாட்கள் அவர்களை முகாம் பக்கமே காணவில்லை. அப்படிப்பட்ட சூழலில் ஒருநாள் இரவு சுமார் இரவு

9.30 மணியளவில் சாதாரண உடையில் முகாமிற்குள் நுழைந்தனர். அகதிகள் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தனர். விறுவிறுவென சென்ற இருவரும் ராணியின் குடும்பம் தங்கியிருந்த வீட்டிற்குள் நுழைந்தனர். அனிதாவை விசாரனைக்கு ஐயா அழைத்து வரச் சொன்னார் எனக் கூறினார்கள்.

ராணி, இந்த வேளையில் வர முடியாது நாளைக்கு காலைல வருகிறோம் எனக் கூறினாள். ஏதோ முக்கியமான விசரனையாம் கையோட உடனே ஐயா கூட்டிட்டு வரச் சொன்னாருன்னு காதிர் சொன்னான். அதை மறுக்க முடியாத சூழலில் ராணி, சரி வாங்க போகலாம் எனப் புறப்பட்டாள். குறுக்கிட்டான் சாமிநாதன் ஐயா அனிதாவ மட்டும் தான் கூட்டிக்கிட்டு வரச் சொன்னர் எனச் சொன்னன். ராணி அனிதாவிடம், ‘பத்தரமாப் போயிட்டு வாம்மா’ எனச் சொல்லி அனுப்பி வைத்தாள்.

அனிதா அவர்களுடன் சென்றாள் நடை பயணமாக...!

இரவு முழுவதும் அனிதா வீட்டிற்கு வரவேயில்லை. கடைக்குட்டி கவிதா ஏதும் அறியாமல் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தாள். ராணி அன்னத்தை எதிர்பார்த்து விடியும் வரை காத்திருந்தாள். பொழுது விடிந்தது. முகமிற்கு வெளியே ஏதோ வாகனத்தின் சப்தம். ராணி வெளியே ஓடி வந்து பார்த்தாள்.

அகதிகள் முகமினை நோக்கி அமரர் ஊர்தி ஒன்று ஊர்ந்து கொண்டு வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய இரண்டு மருத்துவமணைப் பணியாளர்கள் பின்புறக் கதவினைத் திறந்து சடலமொன்றை இறக்கி முகமிற்குள் வைத்துவிட்டுச் சென்றார்கள்.

ராணி வேகமாய் ஓடி முகத்தில் மூடியிருந்த துணியை எடுத்தவள் ஒரு நிமிடம் உறைந்து போனாள். அங்கு பிணமாகக் கிடந்தது அனிதா... ஓஓஒஒ....வென அழுதாள் ராணி. முகமில் உள்ளவர்கள் அவளைச் சுற்றி. கவிதா தூரத்தில் கன்னத்தில் கை வைத்தவளாய் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருக்க சோகமாய் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தாள்.

# கட்டுரை

## நமது பாரம்பரியம்

பிரகதீஸ்வரர் கோயிலானது தஞ்சாவூர் மக்களால் பெரிய கோயில் என்று பொதுவாக அழைக்கப்படுகிறது. இது பெருமை மிகுந்தஒரு கட்டிடக்கலை அதிசயம் ஆகும். அது தனது பிரமாண்டமான அளவு அமைப்புகளாலும் பெருஞ் சிறப்பினாலும்உலகத்தையே வியக்க வைத்திருக்கிறது.இது 1010 ஆம் ஆண்டு இராகுராஜ சோழனால் கட்டப்பட்டது. ஆயிரம் ஆண்டுகளாக உலகப் பரம்பரைச் சொத்தாகிய இந்தநினைவுச்சின்னம் வெற்றிகரமான சிற்பக்கலைத்திறமைக்கும் பழங்கால இந்தியாவின் வளமான கலாச்சாரத்திற்கும் அடையாளமாகத் திகழ்கிறது.

தமிழ்நாட்டின் தானியக் களஞ்சியம் எனப்படும் தஞ்சாவூர் கர்நாடக இசை, நாடகம், பாரம்பரியக் கைவினைப் பொருட்கள் ஆகியவற்றின் இடம் தஞ்சாவூர் ஆகும். தஞ்சாவூர் பழங்காலச் சோழ அரசர்களின் தலைநகரமாகும். சோழர் காலத்தில் பிரபலமாயிருந்த பகட்டான வெண்கல வேலைப்பாடுகள் இன்றும் கூட இந்த நகரில்உருவாக்கப்பட்டு வருகின்றன.

**ஜீ.கோகிலா**

தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## நகங்கள்

நகங்கள் கெரட்டின் என்று சொல்லக்கூடிய ஒருவகை கடினமான புரோட்டின் பொருளால் ஆனது. நகம் எல்லோருக்கும் ஒரே சீராக வளர்வதில்லை. கால் விரல் நகங்களைவிட, கை விரல் நகங்கள் நான்கு மடங்கு மிக வேகமாக வளரும். ஒரு மாததிற்கு சராசரியாக 3 மில்லி மீட்டர் நீளத்திற்கு நகங்கள் வளரும்.

கைவிரல் நகங்கள் விழுந்து புதிதாக முழுவதும் வளர வேண்டுமென்றால் சுமார் மூன்றிலிருந்து ஆறு மாதங்கள் வரை ஆகும். ஒருவருடைய வயது, அவர் ஆணா, பெண்ணா அவரது அன்றாட உழைப்பு, சாப்பாடு விஷயங்கள், பரம்பரை மற்றும் பருவ காலங்களைப் பொறுத்தே, நகங்கள் வளரும் நீளமும் வேகமும் அமையும்.

நகத்திற்கு உள்ளே தெரியும் நிறத்தை வைத்தே என்ன நோய்

இருக்கும் என்று ஓரளவு கண்டுபிடித்து விடலாம். அதே போல உடம்பு ஆரோக்கியமாக இருக்கின்றதா, இல்லையா என்பதை நகத்தைப் பார்த்தே சொல்லி விடலாம். கைவிரல் நகங்களைப் பார்த்தே உடலில் போதுமான அளவு தண்ணீர் உள்ளதா, இல்லையா என்றும் தெரிந்துக் கொள்ளலாம். நகத்தின் இயற்கை நிறம் போய், வேறு நிறம் தென்பட்டாலோ மிகமிக மெல்லியதாக இருந்தாலோ பள்ளமான கோடுகள் இருந்தாலோ, வெடிப்பு இருந்தாலோ லேசாக வளைந்திருந்தாலோ உடலில் ஏதோவொருஇடத்தில் நோய் இருக்கிறது என்பதை காட்டும்.

சிலருக்கு நகம் அதனுடைய இயற்கையான நிறத்தில் இல்லாமல், நிறம் மாறி அழுக்காக இருப்பது போல் தோன்றும் அது 'பங்கஸ்' என்று சொல்லக்கூடிய ஒரு வகை கிருமியினால் ஏற்படும் நோயே, நகத்தை இவ்வாறு பாதிக்கச் செய்கிறது. நீல நிறத்தில் கைவிரல் நிறம் இருந்தால் ரத்தத்தில் சரியாக இருக்க வேண்டிய ஆக்ஸிஜன் அளவு மிக குறைவாக உள்ளது என்று தெரிந்துக் கொள்ளலாம். இருதய நோய் நுரையீரல் நோய் உள்ளவர்களுக்கு கைவிரல் நகங்கள் குவிந்து, பருத்து, பளபளவென்று முருங்கைக்காய் போன்று இருக்கும். இதை 'க்ளப்பிங்' என்று கூறுவர்.

**சா.மஹிஷா**

தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## பூமி

சூரிய குடும்பத்தில் பூமி மட்டுமே உயிரினங்கள் வாழ்வதற்கு தகுதி வாய்ண்ட கோள் ஆகும். உயிரினங்கள் தோன்றும்போது இருந்த பூமியின் நிலை தற்போதைய நிலையிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருந்தது. சூழ்நிலை மாற மாற பல்வேறு உயிரினங்கள் தோன்றின.

ஆதிமனிதனின் தேவைகள் குறைவாகவே இருந்தன. படிப்படியாக நெருப்பு, கருவிகள் மற்றும் சில யுக்திகளைக் கண்டுபிடித்தான். பலவகையான இயந்திரங்களின் கண்டுபிடிப்பும் பரவலான பயன்படும் தொழிற்புரட்சியை உருவாக்கின. இது மனித குலத்திற்கு நன்மையாக மட்டுமின்றி தீமை தருவதாகவும் அமைந்துள்ளது.

சில தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முறைகள் காற்று நிலம் நீர் காடுகள் தாவரங்கள் மற்றும் விலங்குகளை வெகுவாகப் பாதித்துள்ளன. மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக இயற்கை, வனங்கள் அதிக அளவில் எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் பயன்படுத்தப்படுகின்றன. நாம் காடுகளை அழித்து மக்கள் வாழும் இடமாக மாற்றுகிறோம். மழையானது குறைகிறது. நீரின் இயற்கை மூல ஆதாரமாக விளங்குவது மழைநீரேயாகும். மேலும் காடுகள் அழிக்கப்படுவதால் மழை பொழியும் போது மண்ணரிப்புகள் ஏற்பட்டு காடுகள் அழிக்கப்படும்.

வேகமாகப் பெருகிவரும் மக்கட்தொகை காரணமாக அதிகளவு எரிபொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. நிலக்கரி மற்றும் பெட்டோலியப் பொருட்களின் மிக அதிகளவு பயன்பாடு அபாயகரமான ஒரு பிரச்சனை. ஏனெனில் ஏற்கனவே உலகளவில் இந்த இரு எரிபொருட்களில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கச்சா எண்ணெய் மற்றும் பெற்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதிலேயே விலைமதிப்பற்ற நமது அந்நியச் செலாவனின் பெரும்பங்கு செலவாகிறது.

நவீன வாழ்க்கை முறையில் மனிதன் சில செயற்கை பொருட்களை பயன்படுத்துகிறான். உதாரணமாக பிளஸ்டிக் பொருட்கள், டிடர்ஜெண்டுகள்,பெயிண்ட்,குளிர்சாதன்ப் பெட்டி மற்றும் பல இதர செயற்கைப் பொருட்களை பயன்படுத்துவதால் சில நன்மைகளும் தீமைகளும் ஏற்படுகின்றன.

பிளஸ்டிக் - நன்மைகள்

- கண்ணைக் கவரும் பல்வேறு வண்ணங்களிலும் வடிவங்களிலும் கிடைக்கின்றன.
- கையாளுவதற்கு எளிதாக இருக்கின்றன.
- பொர்ள்களை காட்டுவதற்கு பிளாஸ்டிக் உறைகள் வசதியாக இருக்கின்றன.

பிளாஸ்டிக் - தீமைகள்

- பிளஸ்டிக் பொருட்கள் எளிதில் சிதைவடைவதில்லை.
- இவை புதையுறும்போது மண்ணின் வனத்தை பாதிப்படையச் செய்கின்றன. கழிவுநீர்க் கால்வாய்களை அடைகின்றன.

➢விலங்குகள் பிளஸ்டிக் பைகளை விழுங்கும்போது கடுமையான விளைவுகள் ஏற்படுகின்றன.

➢தரம் குறைந்த பிளஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதால் உடல் நலம் பாதிக்கப்படுகிறது.

➢பிளஸ்டிக் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகள் நச்சு தன்மை வாய்ந்தவை.

**தடுக்கும் நடவடிக்கைகள்**

- கழிவுகளை உருவாக்காமல் இருத்தல்
- கழிவுகளை எரிக்காமல் இருத்தல்
- உயிரியல் சிதைவுறும் கழிவுகளைச் சேகரித்து மக்கச் செய்து உரமாக உபயோகித்தல்.

**ஆ.நவநீதகிருஷ்ணன்**
முதலாமாண்டு–பிபிஏ–பி

# பொது அறிவு

## இந்த மாதத்தின் முக்கிய தினங்கள்

***உலகத் தொழிலாளர் தினம்*** *(International Labour Day): உலகத் தொழிலாளர் தினம், உழைப்பாளர் தினம், மே தினம் என்பன 8 மணி வேலை நேரம் கேட்டுப் போராடியதால் பிறந்தது. அமெரிக்கா, ஐரோப்பா, கியூபா, சிலி போன்ற நாடுகள் 1890ஆம் ஆண்டில் மே – 1 ஐ தொழிலாளர்கள் தினமாகக் கடைப்பிடித்தனர். இதே சமயத்தில் சர்வதேச பொதுவுடமை மற்றும் தொழிற்சங்க மாநாடு 8 மணி நேர வேலையை உலகம் முழுவதும் கொண்டு வர மே – 1 ஐ தொழிலாளர் தினமாக கொண்டாட அறைகூவியது.*

***உலக பத்திரிகைச் சுதந்திர தினம்*** *(World Press Freedom Day): பத்திரிகை சுதந்திரம் என்பது மனித உரிமைகளில் ஒன்றாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையும் இதனை*

அங்கீகரித்து 1973ஆம் ஆண்டு மே 3 ஐ உலக பத்திரிகை சுதந்திர தினமாக அறிவித்தது.அடிப்படை உரிமைகளை வெளிப்படுத்தக்கூடிய வகையில் பத்திரிகை சுதந்திரம் இருக்க வேண்டும் என யுனெஸ்கோ கூறுகிறது. மேலும் பத்திரிகையையும், பத்திரிகை சுதந்திரத்தையும் பாதுகாக்க வேண்டும் என்கிறது.

- **உலக ஆஸ்துமா தினம்** (World Asthma Day): ஒருவருக்கு தொடர்ந்து சளி பிடித்தால் அவர்களுக்கு 50 முதல் 70 சதவீதம் வரை ஆஸ்துமா வர வாய்ப்புள்ளது. இந்த நோயினால் உலகம் முழுவதும் 30 கோடி பேர் பாதிப்படைந்துள்ளனர். சிகரெட் புகை, காற்று மாசுபாடு, பாஸ்ட்புட், பவுடர், வாசனை திரவியம் பூசுதல் போன்ற காரணங்களால் ஆஸ்துமா நோய் ஏற்படுகிறது. ஆஸ்துமா பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த இத்தினம் (மே முதல் செவ்வாய்) 1999ஆம் ஆண்டுமுதல் கொண்டாடப்படுகிறது.
- **சர்வதேச தீயணைக்கும் படையினர் நாள்** (International Fire Fighter's Day): ஐரோப்பிய நாடுகளில் மட்டுமே தீயணைப்புப் படையினர் தினம் கொண்டாடி வந்தனர். 1999ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட பெரும் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தும்போது 5 வீரர்கள் உயிரிழந்தனர். இவர்களை நினைவுகூருவதற்காக உலகம் முழுவதும் மின்னஞ்சல் மூலம் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து உலகம் முழுவதும் மே 4 ஆம் நாள் இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.
- **சர்வதேச மருத்துவச்சி நாள்** (International Midwives Day): மருத்துவச்சி என்பவர் பிரசவம் பார்ப்பவர், தாய் சேய் செவிலி, பேறுகாலப் பணிமகள் மற்றும் மகப்பேறு உதவியாளர் என பலப் பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். தாய் மற்றும் சேய் ஆகியோரின் நலனைப் பாதுகாப்பவர்களாக பணி புரிகின்றனர். இவர்களின் அறிவு, திறமை மற்றும் சேவையை

போற்றும் வகையில் 1991ஆம் ஆண்டுமுதல் இத்தினம்(மே—5) உலகில் ஐம்பதிற்கும் மேற்பட்ட நாடுகளில் கொண்டாடப்படுகிறது.

- **உலக தாலசீமியா நோய் தினம்** (World Thalassemia Day): தாலசீமியா என்கிற நோய் குழந்தைகளுக்குப் பிறவியிலேயே ஏற்படக்கூடிய ஒரு நோயாகும். இது ஒருவித இரத்த சோகை. தாலசீமியா பாதித்தக் குழந்தைக்கு இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவு குறைவாக இருக்கும். இதனால் சுவாசிக்கும் ஆக்சிஜன், நுரையீரலில் இருந்து மற்ற பகுதிக்குச் செல்வதில் தடை ஏற்படுகிறது. மக்களிடம் இந்நோயைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவே மே 8 அன்று இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.
- **செஞ்சிலுவை தினம்** (Red Cross Day): போரின்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யும் நோக்கில் உருவான அமைப்புதான் ரெட் கிராஸ். இதற்குக் காரணமானவர் ஹென்றி டுனான்டு. இவர் 1828ஆம் ஆண்டு மே 8 இல் பிறந்தார். முதன்முறையாக 1948ஆம் ஆண்டு மே 8 அன்று செஞ்சிலுவை தினம் கொண்டாடப்பட்டது. பின்னர் 1984ஆம் ஆண்டிலிருந்து செஞ்சிலுவை தினம் மற்றும் சிகப்பு பிறை நிலா தினமாக மே 8 இல் கொண்டாடப்படுகிறது.
- **இரண்டாம் உலகப் போரில் உயிரிழந்தோருக்கான நினைவு நாள்** (Time of Remembrance and Reconciliation for Those who last Their Lives during the Second world war): இரண்டாம் உலகப் போரின்போது பல லட்சக்கணக்கானோர் உயிரிழந்தனர். இது பூமியில் நிகழ்ந்த கொடுமையான வரலாற்று நிகழ்வாகும். எதிர்காலத்தில் மீண்டும் இது போன்று ஒரு யுத்தம் ஏற்படக் கூடாது என்பதை நினைவுறுத்தும் வகையில் இரண்டாம் உலகப் போரில் உயிரிழந்தவர்களுக்காகவும் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் நினைவஞ்சலி மற்றும் நல்லிணக்க நாளாக (மே8—9) கடைப்பிடிக்கப்படுகிறது.

➲**உலக வலசை போதல் தினம்** (World Migratory Bird Day): பறவைகள் தங்களின் வாழ்விடத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட காரணங்களுக்காக வலசை போகின்றன. வலசை போகும் பறவைகள் பூமியின் காந்த விசையில் ஏற்படும் மாற்றத்தை உணர்ந்து தாங்கள் சேருமிடத்தைக் கண்டறிகின்றன. வலசை போகும் பறவைகளைப் பாதுகாப்பது, அதன் இருப்பிடத்தைப் பாதுகாத்தல் போன்ற விழிப்புணர்வை ஏற்படுத்த 2006ஆம் ஆண்டிலிருந்து இத்தினம் (மே – 10, 11) கடைப்பிடிக்கப்படுகிறது.

➲**சர்வதேச செவிலியர் தினம்** (International Nurses Day): பிளாரன்ஸ் நைட்டிங்கேல் (Florence Nightingale) என்பவர் 1820ஆம் ஆண்டு மே 12 இல் பிறந்தார். இவர் மக்களுக்கும், போரின்போது பாதிக்கப்பட்ட ராணுவ வீரர்களுக்கும் சிறந்த மருத்துவ சேவை புரிந்தார். இவரின் மருத்துவ சேவையை கௌரவிக்கும் வகையில் இவர் பிறந்த தினமான மே 12 ஐ சர்வதேச செவிலியர் தினமாக 1965ஆம் ஆண்டுமுதல் கொண்டாடப்படுகிறது.

➲**உலக நியாயமான வர்த்தக தினம்** (World Fair Trade Day): உலகம் முழுவதும் நியாயமான வர்த்தகம் செய்பவர், உற்பத்தியாளர் மற்றும் வாடிக்கையாளர்களை ஒன்றிணைக்கும் விதமாக மே மாதம் இரண்டாவது சனிக்கிழமை உலக நியாயமான வர்த்தக தினம் கொண்டாடப்படுகிறது. உலக நியாயமான வர்த்தகர் சங்கம் இத்தினத்தை அறிவித்துள்ளது. 75 நாடுகளில் 450 அமைப்புகளின் ஒப்புதலுடன் இத்தினம்(மே– இரண்டாவது சனிக்கிழமை) கொண்டாடப்படுகிறது.

➲**உலக அன்னையர் தினம்** (World Mother's Day): அண்ணா ஜார்விஸ் என்கிற அமெரிக்கப் பெண் தன் அன்னைமீது கொண்ட அன்பின் காரணமாக அன்னையர் தினம் ஏற்பட்டது. இவரின் கடும் முயற்சியால் அமெரிக்க ஜனாதிபதி வில்சன் அவர்கள் 1914ஆம் ஆண்டில் அன்னையர் தினத்தை

அறிவித்தார். தாயின் ஆரோக்கியம், கல்வி, பொருளாதார வாய்ப்பு போன்ற சிறந்த வசதிகளை செய்து கொடுப்பதே அன்னையர் தினத்தின் நோக்கமாகும்.

- **வெசாக் தினம்** (Day of Vesak): வெசாக் என்பது மே மாதத்தின் முழு நிலவு நாள். இதே நாளில் கி.மு. 623ஆம் ஆண்டில் புத்தர் பிறந்தார். ஆகவே உலகம் முழுவதும் உள்ள புத்தமதத்தை பின்பற்றுவோர் இத்தினத்தை புனித நாளாகக் கருதுகின்றனர். இத்தினத்தை ஐ.நா. சபையும் சர்வதேச தினமாக(மே-13) 1999ஆம் ஆண்டில் ஒரு தீர்மானத்தின் மூலம் பிரகடனம் செய்தது.
- **சர்வதேச குடும்ப தினம்** (International Day of Families): ஐக்கிய நாடுகள் பொதுச்சபையானது 1993ஆம் ஆண்டு செப்டம்பர் 20 இல் சர்வதேச குடும்ப தினம் மே 15 அன்று அனுசரிக்க வேண்டும் என முடிவு செய்தது. குடும்பத்தை சமத்துவத்தோடு நடத்துவது, குடும்ப வன்முறையை தடுத்தல் போன்ற விழிப்புணர்வுகளை குடும்பங்களில் ஏற்படுத்தவே இத்தினம் கொண்டாடப்படுகிறது. இந்தியாவில் குடும்ப வன்முறைச் சட்டம் 2005 இல் கொண்டு வரப்பட்டுள்ளது.
- **உலக தொலைத்தொடர்பு தினம்** (World Tele Communication Day): உலக தந்தி சங்கம் 1865ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதுவே 1934ஆம் ஆண்டில் உலக தொலைத் தொடர்பு சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இச்சங்கம் துவக்கப்பட்டதன் நினைவாகத்தான் ஒவ்வொரு ஆண்டும் மே – 17 அன்று இத்தினம் கொண்டாடப்படுகிறது. உலகம் முழுவதும் தொலைத்தொடர்பை ஏற்படுத்தி, உலக மக்களிடம் ஒரு பிணைப்பை உருவாக்கியுள்ளது.
- **உலக உயர் இரத்த அழுத்த தினம்** (World Hypertension Day): ஒரு சராசரி நபருக்கு 120/80 மி.மீ. பாதரச அளவு என்பது மிகவும் சரியான இரத்த அழுத்தம். இதைவிட 140/90 அதற்கு மேல் தொடர்ந்து இருந்தால் அதை உயர் இரத்த அழுத்தம் அல்லது இரத்தக்

கொதிப்பு என்கிறோம். இதனால் மாரடைப்பு ஏற்பட்டு உயிர் இழப்பு ஏற்படுகிறது. இது சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தவே இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

- **சர்வதேச அருங்காட்சியக தினம்** (International Museum Day): அருங்காட்சியகங்கள் கல்வி வளர்ச்சிக்குப் பெரும்பங்கு வகிக்கின்றன. உலகளவில் சர்வதேச அருங்காட்சியக ஆலோசனை சபை என்கிற அமைப்பு இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்புடன் உலகில் உள்ள அனைத்து அருங்காட்சியகங்களும் தொடர்பு வைத்துள்ளன. 1978ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச அருங்காட்சியக தினம் மே 18 அன்று கொண்டாடப்படுகிறது.
- **உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினம்** (World AIDS Vaccine Day): எச்.ஐ.வி. தொற்று மற்றும் எய்ட்ஸை தடுக்க தடுப்பூசி மிக அவசியமான, அவசரத் தேவையாக உள்ளது. இதனை கண்டுபிடிக்க விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் முயன்று வருகின்றனர். தடுப்பூசி கண்டுபிடிப்பதன்மூலம் எய்ட்ஸ் ஆபத்தைக் குறைக்க முடியும். இது சார்ந்த விழிப்புணர்வு ஏற்படுத்த 1998ஆம் ஆண்டிலிருந்து மே 18 அன்று எய்ட்ஸ் தடுப்பூசி விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப்படுகிறது.
- **சர்வதேச எய்ட்ஸ் கேண்டில் லைட் நினைவு நாள்** (International AIDS Candlelight Memorial Day): உலகில் தற்போது 33 மில்லியன் மக்கள் எச்.ஐ.வி. பாதிப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எச்.ஐ.வி. விழிப்புணர்வு பிரச்சாரம் உலகில் மிகப்பெரிய பிரச்சாரங்களில் ஒன்றாகும். சமூக விழிப்புணர்வு, சமூகத்தை அணி திரட்டல் போன்ற காரணங்களுக்காக 1983ஆம் ஆண்டுமுதல் இத்தினம் (மே – 3 ஆவது ஞாயிறு) கடைப்பிடிக்கப்படுகிறது. 115 நாடுகளில் 1200 சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து இதனைக் கடைப்பிடிக்கின்றனர்.
- **உலக கலாச்சார பன்முகத் தன்மையின் முன்னேற்ற தினம்** (World Day for Cultural Diversity for Dialogue and Development): கலாச்சாரம் என்பது

பழங்கால வரலாற்றையும், பழக்க வழக்கங்களையும் அறிந்து கொள்ள நமக்கு உதவுகிறது. ஒரு குழுவின், இனத்தின், நாட்டின் கலாச்சாரத்தை அறிந்துகொள்ள முடிகிறது. ஐ.நா. பொதுச்சபை 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தது. அதன்மூலம் மே 21ஐ உலக கலாச்சார பன்முகத் தன்மையின் முன்னேற்ற தினமாக அறிவித்தது.

- **உலக கோத் தினம்** (World Goth Day): உலக கோத் தினம் என்பது பிரிட்டனில் 2009ஆம் ஆண்டு பிபிசி ரேடியோ 6 என்ற எண்ணில் உருவானது. கோத் பிஜேக்கன் மற்றும் மார்டின் ஒல்டு கோத் ஒரு நிகழ்ச்சியை இயக்கினர். ஒவ்வொரு வருடமும் மே 22 இல் இந்த நிகழ்வை நடத்துவது என முடிவு செய்தனர். இசை, பேசன் ஷோக்கள், கலை, கண்காட்சி என இந்நாளில் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.
- **உலக பல்லுயிர் பெருக்க தினம்** (World Biodiversity Day): மனிதர்களாகிய நாம் வாழ்வதற்கு இப்பூமியில் உரிமை உள்ளது போலவே மற்ற விலங்கினங்களும், தாவர இனங்களும் வாழ உரிமை உண்டு. பூமியின் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாப்பது மனிதனின் கடமை. உயிரினங்களை அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக உலக பல்லுயிர் தினம் மே 22 இல் கொண்டாடப்படுகிறது. உயிரினங்களைப் பாதுகாக்கும் ஒப்பந்தத்தில் 150 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.
- **ஐக்கிய நாடுகள் சர்வதேச அமைதி காப்போர் தினம்** (International Day of UN Peacekeepers): யுத்தத்தின்போது சமாதானத்தை ஏற்படுத்தவும், நிவாரணங்களை ஒருங்கிணைக்கவும், அமைதி காப்பாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களை உரிய இடங்களில் ஐ.நா. சபை பணியமர்த்துகிறது. ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆண், பெண் இருபாலரையும் கௌரவிக்கவும்,

சமாதானத்தில் உயிர் நீத்தவர்களை நினைவுகூரவும் 2001ஆம் ஆண்டுமுதல் இத்தினம்(மே – 29) அனுசரிக்கப்படுகிறது.

➲**உலகப்புகையிலை ஒழிப்பு தினம்** (World No – Tobacco Day): புகையிலையில் நிக்கோடின் என்ற வேதிப்பொருள் உள்ளது. இது ஒரு போதைப்பொருளாகும். ஆகவே புகையிலையைப் பயன்படுத்தினால் எளிதில் இப்பழக்கத்திற்கு அடிமையாகி விடுவார்கள். புகையிலையில் 28 வகையான புற்றுநோய் காரணிகள் உள்ளன. புகையிலையின் தீங்கை மக்களிடம் கொண்டுசெல்ல உலகப்புகையிலை ஒழிப்பு தினம் மே 31 அன்று கொண்டாடப்படுகிறது.

## முதல் பெண் பிரதமர்கள்

| நாடு | பெயர் |
| --- | --- |
| இஸ்ரேல் | **கோல்டா மெய்ர்** |
| இந்தியா | **திருமதி.இந்திராகாந்தி** |
| இலங்கை | **சிரிமாவே பண்டார நாயகே** |
| பிரான்ஸ் | **எடித்கோ ரோசான்** |
| நார்வே | **குரோஹர்லேம் புருண்ட்லாண்ட்** |
| போலந்து | **ஹன்னா சுசோகா** |
| பங்களாதேசம் | **காலிதா லியா** |
| அயர்லாந்து | **மேரி ராபின் சன்** |
| துருக்கி | **தான்சு சில்வர்** |
| பாகிஸ்தான் | **பெனாசிர் பூட்டோ** |

**ந.கார்த்திகா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## சின்ன சின்ன கேள்விகள்

1.திரைப்படங்களுக்கு தணிக்கை முறை இல்லாத நாடு எது?
பிரான்ஸ்

2.ஹரிதாஸ் படத்தின் இயக்குநர் யார்?
சுந்தர்லால் நட்கர்னி

3.உலகத்தின் முதல் சினிமாஸ்கோப் படம் எது?
தி.ரோப்

4.ஹாலிவுட்டில் தயாரிக்கப்பட்ட முதல் படம் எது?
ஜெனால்டு கலிபோர்னியா

5.முதன் முதலில் இந்தியாவில் வெளியிடப்பட்ட படம் எது?
ராஜா அரிச்சந்திரா

6.தமிழின் முதல் படம் எது?
மர்மயோகி

7.அதிவேகமாகப் பறக்கும் பறவை எது?
ஸ்வி.ஃ.ப்ட்
8.மிகவும் கூடுதல் இறகுகளை உடைய பறவை எது?
கீழ்க்கையடிக்கும் அன்னம்
9.காது கேட்காத பூச்சி எது?
ஈ
10.சோழப்பேரரசின் இறக்குமதி பொருள் எது?
விலைமதிப்பற்ற கற்கள்

**சீ.சாந்தி**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## சிந்தனைத்துளிகள்

▪எந்த ஒரு செயலிலும் ஈடுபடும் முன் துணிவு அவசியம்

▪நேர்மையுடன் நடந்தால் உயர்வு கிடைக்கும்

▪எந்த ஒரு செயலிலும் பொறுப்புணர்வு அவசியம்

▪நன்றியுணர்வு காட்டல் போற்றத்தக்க ஒன்று.

▪மரியாதையுடன் நடந்து கொள்ளல் நற்செயல்களில் ஒன்று

▪அமைதியுடன் பெறும் வெற்றியே நீண்ட நாள் நிலைக்கும்

▪வாழ்வில் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மதிக்கப்படக் கூடியவர்கள்

▪பகைவரிடம் நட்பு கொள்ளல் வேண்டும்

▪அனைவரிடமும் அன்பாக பழகி உயர்வு பெறல் நன்று

▪தமிழ் கற்றல் தேனினும் இனிது

**வெ.அஜித்குமார்**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## பொன்மொழிகள்

› நன்மையைச் செய்யுங்கள் யாருக்கென்று மட்டும் கேட்காதீர்கள்

› நமக்காகப் பொய் சொல்லக்கூடியவள் நமக்கு எதிராகவும்பொய் சொல்வான்

› தடுமாறி வீழ்வதில் தவறில்லை எழுந்திருக்க எண்ணமில்லாமல் இருப்பது தான் தவறு

›விருப்பமில்லாமல் திணிக்கப்படும் கல்வி வேண்டாத உணவு போன்று

› ஒரு துளி மையிலிருந்து பிறக்கும் கருத்துக்கள், பல்லாயிரம் பேரை சிந்திக்க வைக்கும்

› தவறுகளை ஒப்புக்கொள்ள மறுப்பதை விட பெரிய அவமானம் வேறில்லை

› தானம் செய்பவரின் குழந்தைகள் பிச்சை எடுக்கமாட்டார்கள்

› மௌனமாக இருக்கத் தெரியாதவனுக்கு நன்றாக பேசவும் தெரியாது

› தகுதி இல்லாதவனே பிறரைதவறாக விமர்சிப்பவன்

› மற்றவர்களுடைய தவறுகள் நமக்கு நல்ல பாடங்கள்

**ஜி.சந்தியா**

தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## விடுகதை

› கண்டு பூ பூக்கும் காணாமல் காய் காக்கும் அது என்ன?

கடலைக்காய்

›அரபாத்தி சிறுகீரை அழகுண்டு மணமில்லை அது என்ன?

தோடு

›தேர் ஓடுது பூ உதிருது அது என்ன?

ஆரிக்கல்

›தண்ணி கரு தண்ணி வேர் வெள்ளை வேர் பூ செம்பு அது என்ன?

தீபம்

›கரூர் கருப்பு சேலத்து செவப்பு உடைச்சா பருப்பு தின்னா கசப்பு அது என்ன? குண்டுமணி

›கிணறு நிறைய தண்ணி இருக்கு குருவி குடிக்க தண்ணீர் இல்லை அது என்ன? தேங்காய்

› கையும் இல்லை காலும் இல்லை கட்ட பொம்மக்க கை கொடுத்தால் கிட்ட வரும் மொட்ட பொம்மக்க அது என்ன?

படி

› கருப்பு சட்டைக்காரன் காவலுக்கு கெட்டிக்காரன் அவன் யார்?

பூட்டு

›மொட்ட மரத்துல முந்நூறு காக்கா அது என்ன?

பரிசல்

› அங்கமுத்து வாசலில் தங்கமுத்து காயுது அது எடுத்து வாயில போட்ட திக்குமுக்கலாகுது அது என்ன?

மிளகாய்

**மு.மோகனபிரியா**

தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## சாதிக்க நான்கு விஷயங்கள்

எதிர்த்துப் போராடும் போது –
உறுதியுடன் இருங்கள்
தோல்வியின் போது –
எதிர்ப்புணர்ச்சியுடன்இருங்கள்
வெற்றியின் போது –
பெருந்தன்மையோடுஇருங்கள்
அமைதியின் போது –
நல்லெண்ணத்துடன்இருங்கள்

**ச.நந்தினி**

தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## பொது அறிவு

1.உலகின் அதிசயமான மிரமிடுகள் எங்கு உள்ளன?

எகிப்து

2.தமிழ் சுருக்கெழுத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

சீனிவாச ராவ்

3.முகலாயப் பேரரசின் கடைசிப் பேரரசர் யார்?

பகதூர்ஷா

4.தனது உடலில் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மீன் எது?

ஈல்

5.நான்கு தீவுகளால் உருவான நாடு எது?

ஜப்பான்

6.அமைதிக்கடலின் சாவி எது?

சிங்கப்பூர்

7.உத்திரமேரூர் கல்வெட்டு யாருடைய காலத்தைச் சேர்ந்தது?

வத்சராஜா

8.உலகிலேயே மிகச் சிறிய நாடு எது?

வாடிகன்

9.கிரிக்கெட் எந்த நாட்டின் தேசிய விளையாட்டு?

ஆஸ்திரேலியா

10.இந்தியாவின் மொத்தப் பரப்பளவு எத்தனை சதுர கி.மீ?

32,87,263 சதுர கி.மீ

**ம.சௌந்தர்யா**

தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## அம்மா

அ –அம்மா என்னும் உறவில்
ஆ–ஆவலுடன் என்னை ஈன்றெடுத்து
இ –இனிய அன்பையும்
ஈ – ஈன்ற பண்பையும்
உ –உணவை
ஊ –ஊட்டி வளர்த்த உன்னை
எ –என்னுயிரை
ஏ –ஏழேழு ஜென்மமும்
ஐ –ஐயமின்றி ஆருயிரில்
ஒ –ஒன்றிட்டு
ஓ –ஓயாமல் கவி முழங்கி
ஔ –ஔவை தமிழில்
ஃ - ஃ ரமிட்டு
தலை வணங்குகிறேன் தாயே!!!

**ஜெ.ஸ்வாதி**

கணினி அறிவியல்துறை முதலாமாண்டு 'இ' பிரிவு

# ஓவியம்




I B.Sc MATHS - 'B'


S. CHILAMBUSELYAN
"I" B.Sc.(EC)


பா.பிரியதர்ஷினி
தமிழ் இலக்கியம்
இரண்டாமாண்டு